**<u>Registered Post with A/D</u>**

**09.09.2015**

**From**

**S. Peter Raj** M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
**AVE MARIA** -9, Rice Shop Street,**SATANKULAM**– 628 704, Thoothukudi District
Email:sssavemaria@gmail.com
Mobile:94425 29442

**To**

பொதுத் தகவல் அலுவலர்
மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்
சேர்மாதேவி

அய்யா,

<u>பொருள்:</u> தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் வேண்டுதல் – சார்பாக
<u>பார்வை:</u>தங்களின் கடிதம் ந.க. எண்:2241/B3/2015நாள்01.09.2015

பார்வையில் காண் தங்களின் கடிதத்தோடு 36 தாள்களில் விவரங்களை இணைத்து 300 கிராம் எடை என குறிப்பிட்ட மேலுறையின் மூலம் பதிவுக் கட்டு அடிப்படையில் எனக்கு அனுப்பியுள்ளீர்கள்.

மேற்படி கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் கீழ்காணும் தகவல்களை தருமாறு அன்புடன் வேண்டுகிறேன். அதற்காக பத்து ரூபாய் மதிப்புள்ள நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

1. செல்வி பு. மிக்கேல் ஜோஸ்பின் என்பாருடைய நியமன ஒப்புதல் கருத்துருவில் அசல் சான்றுகளையும் அதன் உண்மைத்தன்மை ஆணைகளையும் ஒப்பிட்டு சரிபார்த்த பிறகுதான் அக்கருத்துருவை பரிசீலனை செய்துள்ளீர்கள். அப்படி இருக்க தாங்கள் எந்த அடிப்படையில்2014/01நாள் 04.01.2014 என்று Rev.Fr.டொமினிக் என்ற பெயருள்ள ஒருவர் அளித்துள்ள உறுதிமொழியை அதன் உண்மைத்தன்மையை பரிசோதிக்காமலும் சரிபார்க்காமலும் அந்த ஒரு

தாளினை மட்டும் மேற்படி பள்ளியின் மைனாரிட்டி உரிமைக்கான சான்றாக ஏற்றுக்கொண்டு மேற்படி செல்வி பு. மிக்கேல் ஜோஸ்பின் என்பாரின் நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளீர்கள் என்ற விவரத்தினை தகவலாகத் தருக. அதன் உண்மைத்தன்மைக்கான ஆவணங்கள் ஏதெனும் இருந்தால் தகவலாகத் தருக.

2. மேற்படி உறுதி மொழியில் Rev.Fr.டொமினிக் என கையெழுத்திட்டிருக்கும் டொமினிக் என்பார் மேற்படி பள்ளிக்கு கண்காணிப்பாளர் என்பதற்கான ஆதாரத்தினை தகவலாகத் தருக. Rev.Fr.டொமினிக் என்பது அன்னாரின் சட்டப்பூர்வமான பெயர்தான் என்பதற்கு ஆதாரத்தினை தகவலாகத் தருக.

3. மேற்படி பள்ளி The Roman Catholic Diocese of Tuticorinஎன்ற கல்வி முகமையால் நடத்தப்படுவதாகவும் அது ரிட் மனு 570/1975 என்ற வழக்கின் மூலம் 24.09.1976 அன்று ரிலிஜியஸ் மைனரிட்டி என்று விளம்புகை பெற்றுள்ளதாகவும் Rev.Fr.டொமினிக் என்பார் விளம்புகை செய்துள்ளார். உறுதியும் அளித்துள்ளார். மேற்படி ரிட் மனுவின் நகலினையும் அந்த ரிட் மனுவின் மீது நீதிமன்றம் கொடுத்துள்ள 24.09.1976நாளிட்ட ஆணையின் நகலினையும் அசல் சான்றினை ஒப்பிட்டு அட்டெஸ்ட் செய்து அனுப்பிட வேண்டுகிறென்.

4. மேற்படி Rev.Fr.டொமினிக் என்பார் மேற்படி பள்ளியின் கண்காணிப்பாளர் என்பதற்கான ஆதாரத்தின் நகலினை அசல் சான்றினை ஒப்பிட்டு அட்டெஸ்ட் செய்து அனுப்பிட வேண்டுகிறென்.

5. மேற்படி Rev.Fr.டொமினிக் என்பார் 04.01.2014தேதியில் Declaration என்கிற பெயரில் அளித்துள்ள சான்றின் இரண்டாவது பத்தியில், 24.09.1976ல் நீதிமன்றம் மேற்படி The Roman Catholic Diocese of Tuticorinஎன்ற கல்வி முகமையை மைனாரிட்டி நிறுவனம் என விளம்புகை செய்துள்ள விவரத்தினை பள்ளிக்கல்வி இயக்குநர் தனது R.c.No.24541/G3/76 dated 20.11.1976 என்ற செயல்முறைகளின் மூலம் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி இயகுநர் அவ்வாறு அனுப்பிய கடிதத்தின் உண்மை நகலினை மைனாரிட்டி உரிமை அடிப்படையில்

மேற்படி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்குமுன்னர் ஒப்பிட்டுப்பார்த்து உண்மைத்தன்மையை சரிபார்த்தீகளா என்ற விவரத்தினை தகவலாகத் தருக. பள்ளிக்கல்வி இயக்குநரின் மேற்படி R.c.No.24541/G3/76 dated 20.11.1976 என்ற கடிதத்தின் நகலினை தாங்கள் அட்டெஸ்ட் செய்து அனுப்பிட வேண்டுகிறேன்.

6. மேற்படி நியமத்திற்கு ஒப்புதல் பெற 04.06.2014 நாளிட்டுஅனுப்பிய தாளாளரின் முகப்பு கடிதத்தில் 17 இணைப்புகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கருத்துருவில குறிப்பிடப்படாத திருமதி எஸ்தர் என்பாரின் இறப்பு சான்று நகல் ஒன்றும் அன்னரின் வாரிசு சான்று நகல் இரண்டும் எனக்கு இணைத்து அனுப்பியுள்ளீர்கள். அதற்கான காரணத்தினை தகவலாகத் தருக. இச்சான்றுகளை தாங்கள் கூடுதல் விவரங்களாக பள்ளியில் கேட்டு அவைகள் அனுப்பப்பட்டிருந்தால் அதற்கான ஆதாரங்கள் அடங்கிய கடிதங்களின் நகலினை தகவலாக அனுப்பித் தருக.

7. மேலும் தகுதி காண் பருவ நியமன ஆணை நகலினை 3 படிகளிலும் தாளாளர் பரிந்துரையுடன் கூடிய நகலினை 2 படிகளிலும் இணைத்து அனுப்பியுள்ளீர்கள். அதன் நகல்களை அதிக படிகளில் அனுப்பியதின் காரணத்தினை தகவலாகத் தருக.

8. மேற்படி நியமத்திற்கு ஒப்புதல் பெற 04.06.2014 நாளிட்டு தங்களுக்கு அனுப்பிய தாளாளரின் முகப்பு கடிதத்தில் இணைப்பு 16ல் "சிறுபான்மைப் பள்ளி என்பதற்கான ஆணை" என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தாங்கள் அவ்வாறான ஆணை எதையும் அனுப்பாததற்கு காரணத்தினை தகவலாகத் தருக. மேலும் தங்களுக்கு அனுப்பிய கருத்துருவில் அவ்வாணையை தாளாளர் இணைத்து அனுப்பினாரா இல்லையா என்ற தகவலினை தருக.

9. மேற்படி பள்ளி சிறுபான்மைப் பள்ளி என்பதால் கல்வி இலாகா தலையிட இயலாது என அலுவலக குறிப்புகளில் எழுதி 13.06.2014ல் ஒப்புதல் அளித்த பிறகு 8 மாதங்கள் கழித்து தாங்கள் தங்களின் கடிதம் த.அ.உ.ச.ப.எண். 1369/அ3/2015 நாள் 26.03.2015 என்ற கடிதம் மூலம் கண்காணிப்பாளர்,

செல்வி பு. மிக்கேல் ஜோஸ்பின், தலைமை ஆசிரியர் மற்றும் கடிதத்தொடர்பாளர் ஆகியோரிடம் கருத்துருவின் நகல், மேற்படி நால்வரும் அளித்துள்ள விவரங்கள் மற்றும் உறுதிமொழிகளின் நகல்கள், சம்மந்தப்பட்ட கோப்பில் உள்ள அலுவலக குறிப்புகள், கூடுதல் விவரங்கள் கேட்ட கடித நகல்கள், நிர்வாகம் அளித்த விவரங்கள், மேற்படி பள்ளி சிறுபான்மைப்பள்ளி என்பதற்கான ஆதாரம் மற்றும் அந்த ஆதாரத்தில் எந்த பக்கத்தில் எந்த பாராவில் பள்ளி நிர்வாகம் சிறுபான்மை உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் ஆகியவற்றினை அனுப்புமாறு வேண்டியுள்ளீர்கள். சிறுபான்மை உரிமை இருப்பதாகக் கூறி மேற்படி ஆசிரியைக்கு நியமன ஒப்புதல் முந்திய தேதியில் அளித்துவிட்டு தாங்கள் மேற்படி கடிதம் மூலம் 8 மாதம் கழித்து மேற்படி நால்வரிடமும் ஆதாரங்கள் கேட்டுள்ளதின் நோக்கத்தினையும் காரணத்தினையும் தகவலாகத் தருக. மேலும் தங்கள் அலுவலக கோப்பில் உள்ள தாங்கள் அறிந்த அலுவலக குறிப்புகளை மேற்படி நால்வரிடமும் கேட்டுள்ள காரணத்தினை தகவலாகத் தருக.

10. ந.க.எண் 2017/அ3/2014 நாள் 13.06.2014 என்ற தங்களது அலுவலகக் குறிப்பில் 8 இடங்களில் மேற்படி பள்ளி சிறுபான்மைப் பள்ளி என்று குறிப்பிட்டு அப்பள்ளி நியமன விவரங்களில் தாங்கள் தலையிட முடியாது எனக் கூறி மேற்படி நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள தாங்கள் தங்களின் கடிதம் த.அ.உ.ச.ப.எண். 1369/அ3/2015 நாள் 26.03.2015 என்ற கடிதம் மூலம் அதற்கான ஆதாரங்களை கேட்டுள்ளீர்கள். தங்கள் அலுவலகத்தில் மேற்படி பள்ளியின் சிறுபான்மை உரிமைக்கான ஆதாரம் இல்லாதபோது அவ்வுண்மையை மறைத்து தாங்கள் ஏன் மேற்படி செல்வி பு. மிக்கேல் ஜோஸ்பின் என்பாரின் நியமத்திற்கு சிறுபான்மை உரிமை அடிப்படையில் ஒப்புதல் அளித்துள்ளீர்கள் என்ற விவரத்தினை தகவலாகத் தருக.

11. ந.க.எண் 2017/அ3/2014 நாள் 13.06.2014 என்ற தங்களது அலுவலகக் குறிப்பை எழுதி சுருக்கொப்பம் இட்டுள்ள அலுவலக பணியாளர்களின் பெயர் மற்றும் அன்றைய பதவி விவரங்களை தகவலாகத் தருக. அவர்கள் தற்போது தங்கள் அலுவலகத்தில்தான் பணிபுரிகிறார்களா அல்லது வேறு அலுவலகத்திற்கு மாறிச்சென்றிருக்கிறார்களா என்ற விவரத்தினையும் அவ்வாறிருப்பின்அவர்கள் பணிபுரியும் தற்போதைய அலுவலகம் மற்றும் பணி, பதவி விவரத்தினையும் தகவலாகத் தருக.

12. மேற்படி நியமன ஒப்புதலில் கையெழுத்திட்டுள்ள மாவட்டகல்வி அலுவலர் பெயர் மற்றும் அன்னாரின் தற்போதய பணி, பதவி விவரத்தினை தகவலாகத் தருக. மேற்படி அலுவலகக் குறிப்பின் 4-வது பக்கத்தின் கடைசியில் “ஏற்பளித்து ஆணை வழங்கப் படுகிறது” என எழுதி அதன் கீழே கையெழுத்திட்டுள்ள அலுவலரின் பெயர் மற்றும் அன்னாரின் அன்றைய பதவி ஆகிய விவரங்களை தகவலாகத் தருக.

13. அலுவலகக் குறிப்பின் கடைசி பகுதியில் மாவட்டக் கல்வி அலுவலரின் கையெழுத்து 16.06.2014ல் இடப்பட்டுள்ளது. அதன் கீழே மூவர் சுருக்கொப்பமிட்டுள்ளனர். அவர்களின் பெயர் மற்றும் அன்னவர்களின் அன்றைய பதவி விவரங்களை தகவலாகத் தருக.

14. மேற்படி ந.க.எண் 2017/அ3/2014 நாள் 13.06.2014 என்ற தங்களது அலுவலகக் குறிப்பின் முதல் பக்கத்தில் கடைசி பத்தியில் பள்ளி நிர்வாகம் 13.06.2014 ல் கடிதம் அனுப்பியதாகவும் அதில் அரசு கடிதம் 46873/பி2/85/2 நாள் 05.09.1995ல் சிறுபான்மை பள்ளி நிர்வாகத்தின் நியமனத்தில் அரசு தலையிட வழியில்லை என குறிப்பிட்டுள்ளதாக எழுதியுள்ளீர்கள். மேற்படி கடிதத்தினை நிர்வாகம் சார்பில் யார் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார் என்ற விவரத்தினை தகவலாகத் தருக. இக்கடிதத்தின் நகல் மற்றும் இது கருத்துருவில் இடம் பெற்ற விதம் ஆகிய விவரத்தினை தகவலாகத் தருக. மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அரசு கடிதத்தின் நகலினை தாங்கள் அட்டெஸ்ட் செய்து தகவலாகத் தருக.

15. இக்கருத்துருவில் இடம் பெற்றுள்ள Rev.Fr.டொமினிக் என்பார் கையெழுத்திட்டுள்ள 06.06.2014நாளிட்ட சான்று மற்றும் 13.06.2014 நாளிட்டு உறுதிமொழி என்ற பெயரில் அனுபப்பட்டுள்ள கடிதம் ஆகியவை கூடுதல் விவரங்களாக தங்களின் எந்த கடிதத்தின் அடிப்படையில் எவ்வாறு யாரால் முகப்பு கடிதத்தின் வழியாக அனுப்பப்பட்டது என்ற விவரத்தினை நகல்களுடன் தகவலாகத் தருக. மேற்படி ஆவணங்கள் இமெயில் மூலம் அனுப்பப்பட்டிருந்தால் யார் அனுப்பினார் என்ற விவரம் அடங்கிய அந்த இமெயில் நகலினை தகவலாகத் தருக.

16. தங்களது அலுவலக குறிப்பின்படி மேற்படி செல்வி பு. மிக்கேல் ஜோஸ்பின் என்பாரின் நியமத்திற்கு மாவட்ட கல்வி அலுவலர் 16.06.2014 அன்றுதான் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளார். ஆனால் 13.06.2014 அன்றே கையெழுத்திட்ட ஆணை ஒன்றினை தாளாளருக்கு அனுப்பியுள்ளதின் காரணத்தையும் இரண்டு ஒப்புதல் ஆணைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதின் காரணத்தினையும் தகவலாகத் தருக.

17. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இது சார்பாக த.நா.தகவல் ஆணையத்திலிருந்து SA 9761/D/2015 dated 12.08.2015என்ற ஆணை தாங்கள் இத்தகவல்களை எனக்கு அனுப்புவதற்கு முன்பே வந்துள்ளது. நானும் அதன் நகலினை 29.08.2015 அன்று அனுப்பினேன். அதைதாங்கள் 31.08.2015 பெற்றதற்கான ஒப்புகை சான்றும் அளித்துள்ளீர்கள். இருப்பினும் தாங்கள் அதை தங்களது கடிதத்தில் குறிப்பிடாமலும் தாங்கள் அளித்திருக்கும் தகவல்களின் நகலினை ஆணையத்திற்கு அனுப்பாமலும் இருப்பதற்கு காரணத்தினை தகவலாகத் தருக.

18. மேற்படி பள்ளி The Roman Catholic Diocese of Tuticorinஎன்ற கல்வி முகமையால் நடத்தப்படுவதாகவும் அது ரிட் மனு 570/1975 என்ற வழக்கின் மூலம் 24.09.1976 அன்று ரிலிஜியஸ் மைனரிட்டி என்று விளம்புகை பெற்றுள்ளதாகவும் Rev.Fr.டொமினிக் என்பார் நீதிபதி போல விளம்புகை செய்துள்ளார். மேற்படி The Roman Catholic Diocese of Tuticorinஎன்ற கல்வி முகமையின் பதிவு, தேதி, இடம், அதன் விலாசம் போன்ற விவரங்கள், விதிகள், துணை விதிகள், பதிவு சான்று ஆகிய அனைத்து இனங்களின் முழு வடிவ நகலினை தாங்கள் அட்டெஸ்ட் செய்து அனுப்பிட வேண்டுகிறேன்.

தகவல்கள் அனைத்தையும் முழு வடிவில் பெற கூடுதலாக பணம் தேவை எனில் அனுப்ப தயாராக இருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி. இப்படிக்கு,

Signed by S.Peter Raj